# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 28.08.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

(தூதரே!) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால் நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்ற போது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என நீர் பதிலளிப்பீராக). [2:187]

அல்லாஹ் நமக்கு மீண்டும் அருளுக்குரிய ரமலானை வழங்கி நம்மீது எண்ணற்ற அருள் புரிந்ததற்கு நாம் அவனுக்கு நன்றி கூறுகிறோம். மனிதன் சிந்தித்துப் பார்த்தால் அல்லாஹ்வின் அருட்கொடைகளை அவனால் எண்ண முடியாது.

அல்லாஹ் கூறுகிறான்: எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சி செய்வார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழியில் நடத்துவோம். (29:70)

இதில் 'நம்மை சந்திக்க முயற்சி செய்பவர்கள்' என்று கூறி அவர்களுக்குத்தான் தன் பக்கம் வருவதற்கான பாக்கியத்தை வழங்குவதாக கூறுகிறான். என்னை அடைவதற்கான வழியை நீங்களே கண்டுபிடித்துக் கொள்ளுங்கள் என்று இறைவன் இதை மனிதனிடம் ஒப்படைக்கவில்லை. சரியான பாதையை நீங்கள் கண்டுபிடித்து விட்டால் நான் உங்களை நெருப்பில் விழுவதை விட்டு காப்பாற்றி விடுவேன் என்று கூறவில்லை. மாறாக, இறைவன் அவனது நடைமுறைக்கு ஏற்ப ஒவ்வொரு காலகட்டத்திலும் இறைவனை அடைவதற்கான வழிகளைக் காட்டுகின்ற நபிமார்களை தன்புறமிருந்து அனுப்புகிறான். மனித திறமைகள் முழுமையாக வளர்ச்சி அடைந்த பிறகு அல்லாஹ்வின் அருளால் படிப்படியான பரிணாம வளர்ச்சி அடைந்து முதிர்ச்சியைப் பெற்ற பிறகு இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அனுப்பினான். அவர்களை அனுப்பி தனது முழுமையான ஷரீஅத்தின் மூலம் தன்னை அடைவதற்கான வழியை அல்லாஹ் காட்டியுள்ளான். மனிதன் அழிவிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக இறைவன் இதை வழங்கினான். மனிதன் இறைவனை அடைகின்ற வழியைப் பின்பற்ற வேண்டும். இதற்கு பல வழிகள் இருக்கின்றது. அதில் ஒன்று தான் ரமலானின் நோன்பு ஆகும். ரமலான் மாதம் எண்ணற்ற அருட்கொடைகளைக் கொண்ட மாதமாகும்.

நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்திற்கு முந்தைய வசனத்தில் அல்லாஹ் இந்தக் கருத்தை தெரிவிக்கின்றான். நோன்பு இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகும். முந்தைய நபிமார்களின் சமுதாயத்திற்கும் இறைவன் நோன்பை கடமையாக்கி இருந்தான். இன்று இது முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். ஆனால் இஸ்லாம் ஒரு முழுமை பெற்ற மார்க்கமாகும். எனவே நோன்பின் வடிவத்தையும் அல்லாஹ் உயர் தரம் வாய்ந்ததாக ஆக்கி இதற்கான போதனையை வழங்கியுள்ளான். ஸஹர் மற்றும் நோன்பு திறப்பதற்கான நேரத்தைக் குறித்துள்ளான். இன்னும் பல வசதிகளையும் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். நோய் மற்றும் பயணத்தின் நிலையில் இதற்கு விதிவிலக்கு வழங்கியுள்ளான். பிறகு இதற்குரிய எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யுமாறு கூறியுள்ளான். சக்தி இருந்தால் ஃபித்யா வழங்குமாறு கட்டளையும் இட்டுள்ளான். நிரந்தரமான நோயாளிகளுக்கு ஃபித்யா கொடுக்குமாறு கட்டளை இட்டுள்ளான். இறை வணக்கம் மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். இதை எல்லா நேரத்திலும் அல்லாஹ் மூஃமின்களின் மீது கடமையாக்கியுள்ளான்.

இது அருளுக்குரிய மாதமாகும். எனவே மூஃமின் சின்னச்சின்ன நோய் மற்றும் பலவீனத்தைக் காரணம் காட்டி விதிவிலக்கு இருப்பதால் நோன்பை விடக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு மூஃமினுடைய முழுமையான கட்டுப்படுதல் இதில்தான் தெரிகிறது. இறைவனுக்காக உண்ணுவதையும், குடிப்பதையும் இன்னும் சில ஆகுமான காரியங்களையும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை விட்டு விடுகிறார். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு அதிக அளவில் முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் இந்நாட்களில் அல்லாஹ் தனது அடியார்களின் பாவங்களை மன்னித்து அவனுக்கு தனது நெருக்கத்தை வழங்குவதற்கான சிறப்பான ஏற்பாட்டை செய்துள்ளான்.

நிச்சயமாக நாம் நமது வழிகளைக் காட்டுவோம் (29:70) என்று எல்லா நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் எந்த பாகுபாடுமின்றி வழிகாட்டுவோம் என்று கூறியுள்ளான். நம்மைச் சந்திக்க முழுமையான முயற்சி செய்கின்ற ஒவ்வொருவருக்கும் நாம் நமது வழிகளைக் காட்டுவோம் என்று கூறுகிறான். இது இறைவன் செய்துள்ள பொது அறிவிப்பாகும். நல்ல எண்ணத்துடன் யார் இறைவன் பக்கம் சென்றாலும் அவர் அல்லாஹ்வின் அருட்கொடையிலிருந்து பலன் பெறுவார்.

ரமலான் மாதத்தில் இறைஅடியார் இறைவனுக்காக இறைவனின் கட்டளைக்கு ஏற்ப தியாகம் செய்கின்றார். இதன் பலனாக அவர் அருட்கொடைகளின் ஊற்றைப் பெறுகிறார். இறைவன் தனது அடியாரின் ஆன்மீக வளர்ச்சிக்காக இறைவன் சிறப்பான வசதியைச் செய்துள்ளான். நன்மையின் வழிகளை விரைவாக கடப்பதற்கு உதவுகின்ற ஒரு சிறப்பான சூழ்நிலையை ஏற்டுத்தித் தந்துள்ளான். அல்லாஹ்வின் நெருக்கத்தை அடியார் பெற வேண்டும் என்பதற்காக எளிய வழிகளை அல்லாஹ் ஏற்படுத்தித் தந்துள்ளான். அடியாரின் துஆக்களை ஏற்றுக் கொள்வதற்காக எல்லா தூரங்களையும் நெருக்கமாக மாற்றி விட்டான்.

**ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

ரமலான் மாதம் வந்ததும் சொர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் மூடப்படுகின்றன. ஷய்த்தான் கட்டிப்போடப்படுகிறான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலம் அல்லாஹ் ரமலானில் உள்ள நிலைமையை எவ்வளவு அழகிய முறையில் படம்பிடித்துக் காட்டிவிட்டான். இந்த ரமலான் மூலம் பலன்பெறுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். எனவே இந்த வகையில் நாம் பாக்கியசாலிகள் இல்லையா? அல்லாஹ் பொதுவான காலகட்டத்தில் கூட ஒரு நன்மைக்குப் பலனாக பன்மடங்கு அதிக நற்கூலியை வழங்குகிறான். பாவத்தின் தண்டனை அதே அளவுதான் கொடுக்கிறான். ஆனால் இந்த நாட்களில் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு எல்லையே இல்லை என்று ஹதீஸ்களின் வாயிலாக நிரூபணம் ஆகின்றது. இறைவன் எண்ணற்ற அருள்களை தனது அடியானின் மீது இறக்கிக் கொண்டிருக்கிறான். பொதுவான நாட்களில் ஷய்த்தானுக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. இறை அடியார்களை எல்லா வகையிலும் வழிகெடுக்க ஷய்த்தான் முயற்சி செய்கிறான். சில நேரங்களில் நன்மை செய்கின்றவர்கள்கூட அவனது ஏமாற்றத்திற்கு ஆளாகி விடுகின்றனர். இதன் காரணமாக நன்மையில் முன்னேறுகின்ற வேகத்தில் சோம்பேறித்தனம் ஏற்பட்டு விடுகிறது. சில நேரம் நன்மையின் வடிவில் தீமையின் பக்கம் ஷய்த்தான் மனிதனை ஏமாற்றி அழைத்துச் செல்கிறான். ஆனால் இங்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப ஷய்த்தான்கள் இந்த மாதத்தில் கட்டப்படுகிறார்கள் என்று கூறியுள்ளார்கள். ஷய்த்தான் தனது சீடர்களை பல்வேறு வழிகளில் மனிதனை வழிகெடுப்பதற்காக நியமித்துள்ளான். அந்த ஷய்த்தான்கள் அனைவரும் கட்டிப்போடப்படுகின்றனர்.

எனவே இந்த ரமலான் மாதத்தின் ஆன்மீக சூழ்நிலையின் மூலம் பயனடைந்தவாறு எல்லா வகையான நன்மைகளையும் செய்து, சுவர்க்கத்தின் எத்தனை அதிகமான வாசல்களில் நுழைய முடியுமோ அத்தனை வாசல்களின் மூலம் சுவர்க்கத்தில் நுழைய வேண்டும். ஷய்த்தானால் எட்ட முடியாத உயர்நிலையை

நீங்கள் அடைய வேண்டும். அதன் பிறகு அந்த உயர் தகுதிகளை நாம் நமது வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆக்கியவாறு செயல்பட வேண்டும். இறைவணக்கத்தின் தகுதியையும் உயர்த்துங்கள். சதகா மற்றும் தானதர்மங்களில் உயருங்கள். நாம் நமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்பட வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரமலான் மாதம் வந்து விட்டால் தானதருமங்கள் செய்வதில் வேகமாக வீசும் புயலைப் போன்று செயல்படுவார்கள். உயர்ந்த நல்லொழுக்கங்களைப் பேணுதல் வேண்டும். இதிலும் புதிய சிறப்பான உயர்வுகளையும் மேன்மையையும் பெற வேண்டும். ஏனென்றால் இதுவும் இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான நல்ல வழியாகும்.

திருக்குர்ஆனை ஓதி அதன்படி செயல்படுவதையும் ஒரு சிறப்பான மனவிருப்பத்துடன் செய்ய வேண்டும். இதுவும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியாகும். ரமலானின் இந்த அருளுக்குரிய நாட்களில் இதன் அருட்கொடையிலிருந்து பலனடைந்தால் நிச்சயமாக நாம் பாக்கியசாலிகள் ஆவோம். இதன் மூலம் நாம் அல்லாஹ்வின் தூய நல்லடியார்களாக ஆகலாம்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

ஆதமின் மகனுடைய எல்லா செயல்களும் அவன் தனக்காகவே செய்கிறான்; நோன்பைத் தவிர. நோன்பு எனக்காக வைக்கப்படுகிறது. நானே அதற்கு கூலி வழங்குகிறேன் என்று அல்லாஹ் கூறுகிறான். நோன்பு கேடயமாகும். உங்களுள் நோன்பு வைத்திருப்பவர் தீயதையும் ஏசிப்பேசவும் வேண்டாம். யாராவது அவரிடம் சண்டையிட்டு ஏசிப்பேசினால், நான் நோன்பாளி ஆவேன் என்று மட்டும் பதில் கூற வேண்டும். ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் உயிர் எவன் கையில் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக நோன்பு வைத்திருப்பவருடைய வாயின் துர்நாற்றம் அல்லாஹ்வின் பார்வையில் கஸ்தூரியை விட தூய்மையானதாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சி உண்டு. ஒன்று, அவர் நோன்பு திறக்கும்போது மகிழ்ச்சி அடைகிறார். இரண்டாவதாக, அவர் தனது இறைவனை சந்திக்கும்போது நோன்பின் காரணமாக அவர் மகிழ்ச்சியடைவார். இந்த உலகத்தை விட்டு நாம் பிரிந்து செல்லும் வரை நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற்றுத் தந்து நம்மை அல்லாஹ்விடம் கொண்டு சேர்க்கின்ற நோன்புகளை நாம் நோற்க வேண்டும்.

நோன்பின் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றாத நோன்பாளிகள், ஹதீஸில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதுபோன்று அதாவது அவர் தனது இறைவனை சந்திக்கும் போது மகிழ்ச்சி அடைவார் என்பதை பெற முடியாது என்று நாம் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எச்சரிக்கையும் செய்துள்ளார்கள். நோன்பு மட்டும் கடைபிடித்து இறைவனை சந்தித்து மகிழ்ச்சி அடைந்து விட முடியாது. மாறாக நோன்புகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான மற்ற நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யுங்கள்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நோன்பின் போது பொய் சொல்வதையும், அதன்படி செயல்படுவதையும் கைவிடாதவன் உண்ணுவதையும், குடிப்பதையும் விட்டு விடுவதால் அல்லாஹ்வுக்கு எந்த தேவையும் இல்லை என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

முதலாவதாக நான் எடுத்துரைத்த ஹதீஸில் தீமையைக் கைவிடுபவர்களுக்கு அல்லாஹ்வின் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. இந்த ஹதீஸில் தீமையை விட்டு தவிர்ந்திருக்காதவனுடைய நோன்பு நோன்பாக ஆக கருதப்படுவதில்லை. மாறாக வெறும் பட்டினி என்று தான் பொருள். யாரும் பட்டினி, பசியோடு இருப்பதை அல்லாஹ் ஒருபோதும் பொருட்படுத்தமாட்டான். அவ்வாறு பசியும் பட்டினியுமாக இருப்பது அந்த மனிதருக்கு எந்தப் பலனையும் தராது என்று கூறப்பட்டுள்ளது.

எனவே உண்மையான மூஃமின் அல்லாஹ்விடம் அவனுடைய அருளை வேண்டி ரமலானின் அருளிலிருந்து பலன் பெறுவதற்கு இந்த சிறப்பான சூழ்நிலையில் விடா முயற்சி அவசியமாகும். நமது சுற்றுப்புறத்தில் நல்லவர்களும் வசிக்கிறார்கள். நன்மையில் முன்னேறுபவர்களும் வசிக்கிறார்கள். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்பவர்களும் வசிக்கின்றனர். அதைப் போன்று தீமையில் மூழ்கி மது குடித்தல் மற்றும் விபச்சாரம் செய்தல் ஆகிய தீமையில் மூழ்கியவர்களும் வசிக்கின்றனர். இன்னும் அதிகமாக நோன்பு வைத்துக் கொண்டு இறைவன் மற்றும் மார்க்கத்தின் பெயரலால் கொலையும் செய்கிறார்கள். ரமலானில் அஹ்மதிகளுக்கு இடையூறு விளைவிப்பதும், ஷஹீதாக்குவதும் நன்மை என்று கருதுகின்ற மக்களும் இருக்கின்றனர். நன்மை செய்பவர்களும் தீமை செய்பவர்களும் ரமலானின் இந்த அருளுக்குரிய மாதம் வந்ததன் காரணமாக மட்டும் சமமாகி விடுவார்களா? நன்மை செய்பவர்களுக்காக சுவர்க்கத்தின் வாசல்கள் திறந்திருப்பது போன்று தீமை செய்பவர்களுக்காகவும் திறக்கப்படுமா? நன்மைகளைச் செய்து இறைவணக்கத்தில் ஈடுபடுபவர்கள் நரகத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு அவர்களின் ஷய்த்தான் கட்டப்பட்டு இருப்பது போன்று தீமைகளில் மூழ்கி இருப்பவர்களும் நரகத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளார்களா? இவர்களின் ஷய்த்தானும் கட்டப்பட்டிருந்தால் இவ்வாறான ஷய்த்தானிய செயல்களை இவர்கள் ஒருபோதும் செய்யமாட்டார்கள். மாறாக இவர்களும் நன்மை புரிபவர்களாக இருந்திருப்பார்கள். எனவே இது சில செயல்களோடும் எண்ணங்களோடும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கும் ரமலான் மாதத்தின் அருள்களைப் பெறுவதற்கும் முயற்சி செய்பவருக்காக இறைவன் சாதாரண பொழுதை விட அதிகமாக உதவி செய்கிறான். அல்லாஹ்வை நேசிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நோன்பு நோற்பவர் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக அனைத்துப் பாவங்களையும் விட்டு விலகுகிறார். மற்ற நேரங்களில் ஆகுமான காரியங்களையும் நோன்பின் போது விட்டு விடுகிறார். எனவே அல்லாஹ்வால் வழங்கப்பட்ட இந்த சிறப்பு ஏற்பாட்டைக் கொண்டு பலன் பெறுவதற்கு அவனது அருளை வேண்டியவாறு அவன்பால் குனிவது அவசியமாகும்.

அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை வழங்கியுள்ளான். அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் கேள்விக்கு அல்லது கேள்வி கேட்க விரும்பும்போது கொடுத்த தூதுச் செய்தியை நிரந்தரமாக திருக்குர்ஆனில் பதிவு செய்து நமக்கு நற்செய்தியாக வழங்கியுள்ளனர். நான் ஓதிய திருக்குர்ஆன் வசனம் நோன்பு பற்றிய கட்டளைக்கு மத்தியில் இடம் பெற்றுள்ளது. இதில் அல்லாஹ் தனது அடியார்களுக்கு தனது நெருக்கத்தையும் அவர் வேண்டுகின்ற துஆவின் கபூலிய்யத்தையும் பற்றிய நற்செய்திகளை வழங்கியுள்ளான். அவ்வாறே நான் முன் வைத்த ஹதீஸ்களும் இந்த வசனத்தை விளக்குகிறது. ஹதீஸ்களில் நோன்பின் போது கடைபிடிக்க வேண்டிய சில கடமைகள் கட்டளைகள் வந்துள்ளது. இங்கும் அல்லாஹ் தனது நெருக்கம் மற்றும் துஆவின் கபூலிய்யத் பற்றி எடுத்துக்கூறி சில நிபந்தனைகளையும் விதித்துள்ளான்.

இதில் முதலாவதாக இந்த இறை வசனத்தில், என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால் என்று கூறி எல்லாரும் ரமலானின் மூலம் பலன் பெறுவதும், துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளைப் பார்ப்பதும் முடியாது. மாறாக, அல்லாஹ்வின் உண்மையான நல்ல அடியாராக ஆவதற்கு முயற்சி செய்பவர்களுக்கு தான் எனது நெருக்கம் கிடைக்கும். அல்லாஹ்வின் சிறப்பான அடியாராக ஆவதற்கு முயற்சி செய்பவர்களின் ஒவ்வொரு செயலிலும் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தஈன் என்பது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இங்கு அல்லாஹ் தனது அடியார்களின் சில இயல்பைப் பற்றி கூறியுள்ளான். அதன்படி அவர்கள் என்னைப் பற்றி கேள்வி கேட்டவர்கள்; என்னைத் தேடுபவர்கள் ஆகியவர்களுக்கு பௌதீக விருப்பம் இருப்பதில்லை என்று கூறுகிறான். இறைவன் எனக்கு கிடைத்தால் நான் எனது வியாபாரத்தை பெருக்கிக் கொள்வேன் என்று அவர்கள் கூறுவதில்லை. மாறாக என் அல்லாஹ் எங்கே இருக்கிறான்? என்று கேட்டு நான் எனது இறைவனைத் தேடுகிறேன்; நான் நிம்மதியிழந்தவனாக உள்ளேன் என்று கூறுவார்கள்.

இன்றைய நாட்களில் உலகம் நாத்திகத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. இறை இருப்புக்கு எதிராக புத்தகங்கள் எழுதப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் நான் என்னைப் பற்றி கவலைப்படுகிறேன். நான் ஓர் இறைவனின் மீது நம்பிக்கை கொண்டவன் ஆவேன். எனது ஒரே ஒரு ஆசை உலகத்தின் சுகபோகங்கள் அல்லது நாத்திகத்தின் தாக்கமோ நான் அஹ்மதி முஸ்லிமாக இருப்பதை விட்டு விலக்கி விடாத அளவிற்கு எனக்கு இறைவனைப் பற்றிய ஞானம் கிடைக்க வேண்டும் என்பதாகும். இந்த ஆசையை பூர்த்தி செய்வதற்காக நான் ரமலானின் நோன்புகளை முழு கவனத்துடன் வைக்கிறேன் என்று இறை நல்லடியார்கள் கூறுகின்றனர்.

நான் உங்களுக்கு பக்கத்தில் இருக்கிறேன். உண்மையான முஸ்லிமாக வாழ முயற்சி செய்கின்றவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய முழுமையான **ஷரீஅத்தின்** மீது நம்பிக்கை கொள்பவர்கள், அதன்படி செயல்பட முயற்சி செய்பவர்கள், இறைவனின் தேட்டத்தால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) சுன்னத் மற்றும் ஹதீஸின்படி செயல்படுபவர்கள், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிக்கின்றவர்கள் ஆகியவர்களுக்கு நான் அருகில் இருக்கிறேன் என்று அல்லாஹ் கூறுகிறான். எனது அடியார்கள் என்னை அழைக்கும் போதெல்லாம் நான் அவர்களுக்கு பதில் தருகிறேன். எனவே அல்லாஹ்விடம் கேள்வி பதிலின் தொடரை வைத்துக் கொள்ள விரும்பினால் உண்மையான முறையில் அல்லாஹ்வைத் தேடுவது அவசியமாகும்.

தேடுவதற்கான வழிகளையும் அல்லாஹ்வே நமக்கு வழங்குகிறான். திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி செயல்பட வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சுன்னத்தைப் பின்பற்ற வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அதிக அளவில் நேசிக்க வேண்டும். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க வானங்கள் மற்றும் பூமியின் சாட்சியங்களோடு வந்த இக்காலத்தின் இமாமோடு முழுமையான விசுவாசம் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசருடைய பைஅத்தில் தூய உள்ளத்தோடு இணைதல் வேண்டும். வெறுமனே முஸ்லிம் என்று தன்னைக் கூறிக் கொள்வது போதுமானதல்ல. **அஸ்லம்னா** – நாங்கள் கட்டுப்பட்டோம் என்று வெறுமனே கூறுவது போதுமானதல்ல. மாறாக, இறைவன் கூறிய **யூமினூபி** – என் மீது ஈமான் கொள்ளுங்கள் என்பதன் கருத்தைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் ஈமானை முழுமைப்படுத்துங்கள். ஈமானின்படி செயல்படுவதற்கான விளக்கத்தை நீங்கள் சுயமாக வழங்காதீர்கள். மாறாக அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் கூறிய வழியை கடைபிடியுங்கள்.

அல்லாஹ் **யூமினூபி** – என் மீது ஈமான் கொள்ளுங்கள் என்று கூறுகிறான். என் மீது ஈமான் கொள்வதற்கான உயர் தகுதி எவ்வாறு கிடைக்கும்? **ஃபல் யஸ்தஜீபு லீ** – அதாவது எனது கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு **லப்பைக்** என்று கூறும்போது ஈமான் கிடைக்கும். திருக்குர்ஆனின் எல்லா கட்டளைகளின்படியும் செயல்பட முயற்சி செய்து கொண்டிருந்தால் தான் இந்த நிலை கிடைக்கும். இறையச்சத்தின் வழியைப் பெற்று அதன்படி வழி நடக்கவும், இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காகவும் அல்லாஹ்வின் கட்டளைக்கு லப்பைக் என்று கூறியவாறு கட்டுப்படுவதற்காக தூய்மையான உள்ளத்தோடு இறைவனை வணங்குவதும் விடா முயற்சி செய்வதும் அவசியமாகும். அல்லாஹ்வின் உரிமையையும் அடியாரின் உரிமையையும் வழங்க வேண்டும். உயர்ந்த நல்லொழுக்கத்தைப் பேணுவதும் அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

(அல்லாஹ்வின் உரிமைகள், அடியார்களின் உரிமைகள் ஆகிய) இவ்விரண்டிலும் உறுதியாக இருப்பவர்கள்தான் இறையச்சம் உடையவர்களாவர். இவர்களுக்குத்தான் இறைவனின் தேட்டம் இருக்கிறது என்று கூற முடியும். இவர்கள் தான் இறைவனின் கட்டளைக்கு லப்பைக் என்று கூறியவாறு கட்டுப்படுபவர்கள் என்று கூற முடியும். சில நல்லொழுக்கம் இருக்கிறது. ஒரு சில உரிமைகளைப் பேணுகிறார்கள். ஆனால் சிலவற்றை பொருட்படுத்துவதில்லை என்றால் அவ்வாறான மனிதனை இறையச்சம் கொண்டவர் என்று கூற முடியாது.

எனவே உலகம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்காக இறையச்சத்தின் இந்த நிலையை அடைவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். எனவே இந்த ரமலானில் நாம் தூய உள்ளத்தோடு அல்லாஹ்வை வணங்க முயற்சி செய்பவர்களாகவும், அல்லாஹ்வின் ஒருமையைப் புரிந்து கொண்டு அதற்கான உரிமையை வழங்க நமது எல்லா திறமைகளையும் கொண்டு முயற்சி செய்பவர்களாகவும், தொழுகையின் உரிமையைப் பேணுபவர்களாகவும் ஆகிவிட வேண்டும்.

நாங்கள் ஐந்து வேளைத் தொழுகையை நிறைவேற்ற முயற்சி செய்கிறோம். ஆனால் சில சமயம் ஓரிரு தொழுகைகள் விடுபட்டுப் போகின்றன என்று சிலர் பதில் கூறுவார்கள். இதைக் கேட்டு எனக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது. அதே சமயம் நான் வேதனையும் அடைகிறேன். தொழுகையே விடுபட்டுப் போகிறது என்றால், அல்லாஹ்விடம் எவ்வாறு துஆக்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்ட முடியும்? அவ்வாறே எல்லா உயர்ந்த நல்லொழுக்கங்களையும் நம்மில் உருவாக்க ஒரு வேதனையோடு முயற்சியும் செய்து வருவது அவசியமாகும்.

ரமலான் இறையச்சம் மற்றும் இறை நெருக்கம் ஆகியவற்றைப் பெறுவதற்கான மிகச்சிறந்த வழியாகும். இதிலிருந்து முழுமையாக பலன் பெறுவதற்கு நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். நமக்காக இறைவன் திறந்துள்ள சொர்க்கத்தின் வாசல்களில் எல்லா வாசல்களின் வழியாகவும் அல்லாஹ்வின் உதவியோடு நுழைய நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கு முன்னேறுகின்றவர்கள் என்று நாம் அழைக்கப்படுவோம். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்,** இந்த வசனம் தொடர்பாக ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

வெற்றி பெறுவதற்காக அவர்கள் துஆவின் மூலம் என்னை அடைய முயற்சி செய்ய வேண்டும். என் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று (இவ்வசனத்தில்) அல்லாஹ் கூறுகிறான்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சிறப்பான மாதம் இதுவாகும். அல்லாஹ்வின் நெருக்கத்தை வேண்டுவது தான் நாம் செய்ய வேண்டிய மிகப்பெரிய துஆ ஆகும். அவனைச் சந்திக்க விரும்ப வேண்டும். அல்லாஹ்வை சந்திப்பதற்காக அவனிடம் துஆ செய்ய வேண்டும். இறைவன் கிடைத்து விட்டால் பிற ஆசைகள் எல்லாம் தானாகவே நிறைவேறிக் கொண்டிருக்கும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக.

இங்கு ஒரு விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ என்றால் என்ன? எந்த வகையன துஆவை செய்ய வேண்டும் என்பதையும் விளக்கியுள்ளார்கள்.

**இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தினமும் துஆ செய்து வருகிறோமா? தொழுகை முழுவதும் துஆ தானே! என்று எண்ணாதீர்கள். ஏனென்றால் மஃரிஃபத்திற்குப் பிறகு இறை அருளின் மூலம் உருவாகின்ற துஆவின் சிறப்பே தனியாகும். அது மனிதனை ஃபனா – அர்ப்பணம் ஆக்கி விடும் ஒன்றாகும். அது வேதனையை உருவாக்கும் நெருப்பாகும். அது கருணையை ஈர்க்கின்ற ஒரு காந்த விசையாகும். அது இறுதியில் உயிரை வழங்குகின்ற ஒரு மரணம் ஆகும். அது இறுதியில் கப்பலாக மாறி விடுகின்ற ஒரு காட்டு வெள்ளமாகும். நடக்காது என்று கைவிடப்பட்ட வேலை எல்லாம் இதன் (துஆ) மூலம் நடந்து விடுகிறது. எல்லா விஷமும் இதன் மூலம் விஷமுறிவாகி விடுகிறது.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

துஆ இறைவன் புறமிருந்து தோன்றி இறைவன் பக்கமே செல்கிறது. துஆவின் மூலம் உங்கள் உயிர் உங்களுக்கு நெருக்கமாக இருப்பதைப் போன்று இறைவன் நெருங்கி விடுகின்றான். மனிதனிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது துஆவின் முதல் அருட்கொடையாகும்.

அல்லாஹ் நமக்கு இந்த ஞானத்தை வழங்குவானாக. இதன் மூலம் நாம் துஆவின் உண்மைத்துவத்தைப் புரிந்து இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான தத்துவத்தைப் புரிந்து கொள்கின்ற நமது ஒவ்வொரு செயலும் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதாக அமைய வேண்டும். ரமலானில் பிறரை விட்டு தனித்துக் காட்டுகின்ற தூய மாற்றம் நம்மில் உருவாக வேண்டும்.

ஜமாஅத் எல்லா தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்கும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும் அதிக அளவில் துஆ செய்ய வேண்டும். மார்க்கத்தை உறுதி ஆக்குவதற்காக துஆ செய்வது நிச்சயமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருவதாக இருக்கும். இவ்வாறு துஆ செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. இதன் விளைவாக நம்மில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவானாக. நாம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றவர்களாகத் திகழ்வோமாக.

## மவ்லானா தோஸ்த் முஹம்மத் சாஹிப் ஷாஹித்

இரண்டு நாட்களுக்கு முன் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்கள் ஜமாஅத்தின் மிகச் சிறந்த ஆலிம் ஆவார்கள். அல்லாஹ் இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக. தாரீகே அஹ்மதிய்யத் (அஹ்மதிய்யத்தின் வரலாறு) என்ற நூலை எழுதியவர் ஆவார். இவர் முவர்ரிகே அஹ்மதிய்யத் (அஹ்மதிய்யத்தின் வரலாற்று ஆசிரியர்) என்று அழைக்கப்பட்டார்கள். இந்த நூலின் இருபது பாகங்கள் வெளிவந்துள்ளன. என்னுடைய பார்வையில் இவர் வெறும் முவர்ரிகே அஹ்மதிய்யத் மட்டுமமல்ல. மாறாக, இவர் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் ஒரு அதிகாரம் ஆவார்கள். அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தின் ஒளியை எல்லா நேரமும் உலகில் பரப்புவதற்காக எப்போதும் முயற்சி செய்து வந்தவர் ஆவார். இவர்களுடைய நினைவாற்றல் மிகவும் வியக்கத்தக்கதாகும். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியதாக பலர் எனக்கு கடிதம் எழுதினார்கள். ஆனால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவ்வாறு கூறினார்களா? இல்லையா? என்பது எனக்கு தெரியாது. ஆனால் நான் இவர்களை இவர் ஒரு என்சைக்ளோபீடியா ஆவார் என்று கூறுவது உண்டு. இப்போது (கடிதங்களைப்) படித்து ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு இவ்வாறு கூறியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேன். கடந்த கால முஜத்திதீன், அவ்லியாக்கள் ஆகியோர் எழுதிய நூல்களில் ஆதாரங்கள் கூட இவருக்கு மனனமாக தெரிந்திருந்தது. புத்தகத்தின் பெயர் அதில் உள்ள பக்கம் வரைக்கும் மனனமாக வைத்திருந்தார்கள்.

எனக்கு சிலர் எழுதிய கடிதத்தில் இவருடைய பல நல்ல இயல்புகளைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார்கள். இவருடைய மகளிடமிருந்தும் இவரைப் பற்றி நான் சிலவற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அனைத்தையும் இங்கு கூற முடியாது. எனினும் ஒரு சில விஷயங்களை இங்கு எடுத்துரைப்பேன்.

இவர் சுயநலம் பாராமல் எந்நேரமும் ஜமாஅத்திற்காக வேலை செய்கின்றவர் ஆவார். இவர் வாழ்வை (ஜமாஅத்திற்காக) அர்ப்பணித்தவர் ஆவார். கிலாஃபத்தோடு மிக நெருங்கி தொடர்பு கொண்டவர் ஆவார். நல்லவர்; துஆ செய்யும் பழக்கம் உடையவர். யாராவது இவரிடம் துஆ செய்ய வேண்டினால் என்னிடம் துஆ செய்யுமாறு கூறாதீர்கள். துஆவிற்காக கடிதம் எழுத வேண்டும் என்றால், ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கடிதம் எழுதுங்கள் என்று கூறுவார். அளவில்லாத பணிவு, தன்னடக்கம் உடையவர் ஆவார். அவர் படிக்கும் போது எதாவது புதுக் கருத்துக்கள் அதில் தென்பட்டால் அந்தப் பக்கத்தின் ஒரு நகலை எனக்கும் அனுப்புவார்கள். நிச்சயமாக (ஆலிம் பா அமல்) நல் அமல்கள் செய்கின்ற ஒரு ஆலிம் என்று அழைக்கப்படத் தகுதி உடையவர் ஆவார்.

ஸுல்தானே நஸீர் (வல்லமைமிக்க உதவியாளர்) ஒருவரை இழந்து விட்டோம் என்று எண்ணுகின்ற போது துக்கம் ஏற்பட்டாலும் அல்லாஹ் வரும் காலங்களில் கிலாஃபத்திற்கு இவ்வாறு ஸுல்தானே நஸீரை தந்து கொண்டிருப்பான் என்பது உண்மை.

முபஷ்ஷிர் அயாஸ் சாஹிப் அவர்கள் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவர்களோடு Meeting களில் கலந்து கொண்டிருக்கிறேன். இவர்கள் கிலாஃபத்தோடு மிக அதிக பற்றும் நேசமும் கொண்டவர்கள் ஆவர். காந்த ஊசி எவ்வாறு துருவத்தை நோக்கியே நிற்குமோ அவ்வாறு இவருடைய சிந்தனை எப்போதும் கிலாஃத்தை நோக்கியே இருக்கும்.

ஒரு முரப்பி சாஹிப் (அதாவது மவ்லவி சாஹிப்) எனக்கு எழுதிய கடிதத்தில், சவூது அரபியாவின் அமீர் சாஹிப் வந்து அஹ்மதிய்யத்தின் வரலாறு எழுத வேண்டும் என்று கூறினார்கள். தோஸ்த் முஹம்மது சாஹிப் ஷாஹித் அவர்களிடம் செல்வோம் என்று கூறினார்கள். இதன்படி அவர்கள் தோஸ்த் முஹம்மது சாஹிப் அவர்களின் அலுவலகம் சென்றார்கள். அரை மணி நேரத்தில் முழு ஆதாரங்களையும் வரலாறைக் கூறி சில நகல்களையும் எடுத்துக் கொடுத்து விட்டார்கள். அவர் ஆதாரங்களின் அரசர் ஆவார்.

ஒருவர் எனக்கு எழுதிய கடிதத்தில் ஒருமுறை நான் ஒரு ஆதாரம் பெறுவதற்காக இவருடைய அலுவலகத்திற்கு சென்றேன். உடனே ஆதாரத்தை எடுத்து முன் வைத்தார்கள். அப்போது நான் அவருடைய மேஜையிலிருந்து பேனாவை எடுத்து எழுத ஆரம்பித்தேன். முதலில் பேனா எடுத்தேன்; பிறகு தாளை எடுத்தேன். உடனே அவர் நீர் சொந்த வேலைக்காக ஆதாரம் திரட்ட வந்துள்ளீர். எனவே சொந்த பேனாவையும், உங்களுடைய Note Book ஐயும் பயன்படுத்துங்கள் என்று கூறி பேனாவையும் தாளையும் வாங்கிக் கொண்டார்கள். ஆக, ஜமாஅத்தின் பொருள்களுக்கு மிக அதிக அளவில் மதிப்பளித்தார்கள்.

ஒருமுறை மவ்லவி சாஹிப் லாஹூருக்கு சுற்றுப்பயணம் சென்றார்கள். அப்போது மவ்லவி சாஹிப் அவர்களின் நண்பர், உங்களை வரவேற்க என்னால் வர முடியாது. எனவே நீங்கள் வந்துவிடுங்கள் என்று செய்தி அனுப்பினார். தனிப்பட்ட நட்பின் தொடர் இருந்ததால் மவ்லவி சாஹிப் அங்கு சென்றார்கள். ரிக்ஷாவில் மவ்லவி சாஹிப் அவர்கள் அழைத்து சென்றார்கள். அப்போது மவ்லவி சாஹிப் ரிக்ஷாவின் வாடகையைக் கொடுக்க முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்களே வாடகையை செலுத்தி விட்டார்கள். அடுத்த நாள் அங்கு பள்ளிவாசலுக்கு போக வேண்டியதிருந்தது. அப்போது மவ்லவி சாஹிப் நீங்கள் போய் Taxi அழைத்து வாருங்கள். Taxi -க்கான வாடகையை நானே செலுத்துவேன் என்று மவ்லவி சாஹிப் கூறிவிட்டார்கள். மேலிடம் எனக்கு Taxi க்கான வாடகையைத் தருகிறது. நமது ஆலிம்களுக்கு கண்ணியம் உண்டு என்பதால் நான் ரிக்ஷாவில் உட்காரமாட்டேன். Taxi -ல் தான் போவேன் என்று கூறினார்கள். இது மவ்லவி சாஹிப் அவர்களின் கட்டுப்படுதல் என்ற பண்பு தெரிய வருகிறது. மேலும் மேலிடம் எதைப் பயன்படுத்தும்படி கூறுகிறதோ அதை பயன்படுத்த வேண்டும்.

இதனால் கட்டுப்படுதல், பணிவு ஆகிய வட்டத்தை விட்டு வெளியேறி விடக் கூடாது என்ற பாடமும் இதில் இருக்கிறது. அதே சமயம் ஆலிம்களுக்கென்று ஒரு மரியாதை உண்டு. இதையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற பாடமும் இருக்கிறது.

1935 ஆம் ஆண்டு மதராஸா அஹ்மதிய்யா காதியானில் சேர்ந்தார்கள். 1944-ல் ஜாமியாவின் படிப்பு ஆரம்பமானது. 1946 -ல் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் மவ்லவி பாஸில் தேர்ச்சி பெற்றார்கள். இதில் 3 ஆம் நிலையை வகித்தார்கள். 63 ஆண்டு காலம் இவர்கள் ஜமாஅத்திற்கு தொண்டு செய்துள்ளர்கள். 1952 -ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப அல்ஃபஸ்ல் பத்திரிகையில் கட்டுரை எழுத ஆரம்பித்தார்கள். மிக நீண்ட காலம் வரை கட்டுரை எழுதுவதை தொடர்ந்து செய்து வந்தார்கள். 1953 -ல் தாரீகே அஹ்மதிய்யத் (அஹ்மதிய்யத்தின் வரலாறு) தொகுக்கும்படி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதன் இருபது பாங்கள் இதுவரை வெளியாகி விட்டன. இதில் 2004 வரை ஜமாஅத்தின் வரலாறு முழுமையாக உள்ளது. இதை அடுத்து உள்ள வரலாறுகளுக்கான குறிப்புகளை எழுதியுள்ளார்கள்.

இவர்களுக்கு ஒரு மகன் டாக்டர் சுல்தான் முபஷ்ஷிர் சாஹிப். இவர் ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார்கள். ஐந்து மகள்கள் உள்ளனர். இவர்களுடைய குடும்பத்திற்கு அஹ்மதிய்யத் கிடைத்த சம்பவம் இதுவாகும்.

இவர்களுடைய ஒரு நண்பர் ஹஸ்ரத் மியான் முஹம்மத் முராத் சாஹிப். ஹாஃபிஸாபாதி மிகவும் நல்லவர். அஹ்மதிய்யத்தை தழுவினார். மவ்லவி சாஹிப் உடைய தாத்தாவுக்கு இது தெரிய வந்ததும் அவர் மீது அதிக கொடுமை இழைத்தார். இவர் காயம் அடையும் அளவிற்கு இவரை அடிக்கலானார். அப்போது ஹாஃபிஸாபாதி சாஹிப் உங்களுடைய 3 அறிவாளி மகன்கள் கண்டிப்பாக அஹ்மதி ஆகி விடுவார்கள் என்று கூறினார். இதன் பிறகு மவ்லவி சாஹிபின் தாத்தா அதிக கோபப்பட்டு அவருக்கு இன்னும் கடுமையான தண்டனை வழங்கினார். இது தொடர்பான ஒரு சம்பவத்தை மவ்லவி சாஹிப் கூறியுள்ளார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜாபா நக்லா என்ற ஒரு குக்கிராமத்தில் இருந்தார்கள். இந்த கிராமத்தை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள்தான் உருவாக்கினார்கள். இங்கு தங்கியிருந்து தஃப்ஸீரே கபீர் எழுதிக் கொண்டிருந்தார்கள். அப்போது மவ்லவி சாஹிப் அங்கு சென்றார்கள். ஆனால் அங்கு செல்வதற்கு முன் நான் எனது தாத்தாவை அருகில் உள்ள கிராமத்தில் சென்று சந்தித்தேன். அப்போது அவர் வாழ்வில் கடைசி காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார். அவரை சந்திக்கும் போது எனது தாத்தா உனது கலீஃபாவுக்கு எனது ஒரு செய்தியை சொல் என்று கூறினார். எனக்கு ஆறு மகன்கள் இருக்கின்றனர். அவர்களின் மூவரில் ஒருவர் திருக்குர்ஆனை மனனம் செய்தவர். இன்னொருவர் நல்ல புத்திசாலி ஆவார். இந்த மூன்று மகன்களையும் உனது கலீஃபா என்னிடமிருந்து பறித்துக் கொண்டார். பாக்கியுள்ள மூன்று மகன்களும் படிப்பறிவு இல்லாதவர்கள். இவர்களை எனக்குத் தந்து விட்டார். உனது கலீஃபா இவ்வாறு என்னிடமிருந்து மூன்று மகன்களை பறித்துதான் ஆக வேண்டும் என்றால், இந்த மூன்று மகன்களை எடுத்துக் கொண்டு புத்திசாலியாக இருக்கிற அந்த மூன்று மகன்களையும் என்னிடம் திருப்பி தந்து விடுமாறு கூறு என்று என்னிடம் சொன்னார். பிறகு மவ்லவி சாஹிப் கூறுகிறார்கள். நான் ஜாபா நக்லா கிராமத்திற்கு சென்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சந்தித்தேன். அப்போது எனது தாத்தா என்னிடம் கூறிய செய்தியை சொன்னேன். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நான் கூறியதைக் கேட்டு புன்னகைத்தார்கள். பிறகு உனது தாத்தாவிற்கு என்னுடைய பதிலை சென்று சொல்லுங்கள். உங்கள் மகன்களை நீங்கள் சொன்னபடி மாற்றிக் கொள்வதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. நீங்கள் உங்கள் அஹ்மதியல்லாத மகன்களை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். உங்களுடைய அஹ்மதி மகன்களுக்கு அவர்கள் அஹ்மதிய்யத்தை விட்டு விலக விரும்பினால் விலகிக் கொள்ளட்டும் என்று நான் அனுமதி வழங்குகிறேன் என்று கூறினார்கள். அதன் பின்பு எனது தாத்தாவை சந்தித்து இதைக் கூறிய போது எனது தாத்தா, உங்கள் கலீஃபா சாஹிப் ரொம்ப உஷாரான ஆளு. எனது அந்த 3 மகன்களும் மிர்ஸாயிஸ்ஸத்தை விட்டு விலக மாட்டார்கள் என்று நன்றாக அவருக்கு தெரியும். அதனால்தான் சம்மதித்து விட்டார் என்று கூறி அழுதார்.

மவ்லவி சாஹிப் உடைய தாயார் 1949 -ல் ஒரு ருஃயாவின் அடிப்படையில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். 1951 -ல் ரப்வாவின் ஜமிஅத்துல் முபஷ்ஷரீன் உடைய முதல் ஆண்டு ஷாஹித் படிப்பை முடித்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார். இந்த வகுப்பு நிறைவு ஆண்டின் போது நடந்த பிரிவு உபசார விழாவில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த விழாவில் அன்பளிப்பை ஏற்றுக்கொண்டு மவ்லவி சாஹிப் ஒரு உரை நிகழ்த்தினார்கள். இதைக் கேட்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மிக்க மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். ஜமாஅத்தில் முபஷ்ஷரீனிலிருந்து ஷாஹித் டிகிரி முடித்தவுடன் ஜமாஅத்தே இஸ்லாமிய ஓர் ஆய்வு என்ற பெயரில் ஒரு கட்டுரை எழுதினார்கள். இதற்கான தலைப்பையும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தான் தேர்வு செய்தார்கள். அது மட்டுமல்லாமல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இந்த கட்டுரையை எழுதினார்கள்.

1953 -ல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மவ்லவி சாஹிப் அவர்களிடம் அஹ்மதிய்யத்தின் வரலாற்றை தொகுக்கும் பணியை ஒப்படைத்தார்கள். இது தவிர 40க்கும் மேற்பட்ட தலைப்புகளில் புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். இதில் சில புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அரபி

ஞானம் உடையவர். மரபைப் பேணுபவர்கள் ஆவார். எழுதுவதிலும் சொற்பொழிவு நிகழ்த்துவதிலும் திறமை வாய்ந்தவராக விளங்கினார்கள். அல்லாஹ் இவர்களுக்கு நல்ல குரல் வளத்தை வழங்கியிருந்தான்.

1974 -ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் தலைமையில் பாகிஸ்தான் மக்களவைக் கூட்டத்திற்கு சென்ற ஜமாஅத்தின் குழுவில் மவ்லவி சாஹிப் அவர்களும் இருந்தார்கள். அந்த குழுவில் கலந்து கொண்ட உறுப்பினர்களுள் மவ்லவி சாஹிப் கடைசி ஆளாக மரணம் அடைந்துள்ளார்கள். அந்தக் கூட்டத்தில் ஆதாரங்கள் வழங்குவதற்கான பணி மவ்லவி சாஹிப் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர் ஏதாவது ஒரு ஆதாரத்தை உடனடியாக எடுத்து வைத்தால் அந்த மக்களவை உறுப்பினர்கள் அனைவரும் வியப்படைந்து விடுவார்கள். அந்தக் கூட்டத்தின் போது ஒரு உறுப்பினர் இதை சுட்டிக்காட்டியும் இருக்கிறார். நமது ஆலிம்களிடம் ஏதாவது ஆதாரம் கேட்டால் பல நாட்கள் ஆகிவிடுகிறது. இது என்ன தலைவலி என்று தோன்றுகிறது. ஆனால் மிர்ஸாயிகளின் இந்த சின்ன மவ்லவி 15 நிமிடங்களில் ஆதாரத்தை தேடிக் கொண்டு வந்து விடுகிறாரே என்று கூறினார்.

ஜல்ஸாக்களில் மிக நீண்ட காலமாக சொற்பொழிவு நிகழ்த்த அல்லாஹ் வாய்ப்பு வழங்கினான். 1959 ஆம் ஆண்டு நடந்த கூட்டத்தில் இவர்கள் முதன் முறையாக சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். 1958 ஆம் ஆண்டு இந்த சொற்பொழிவு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மஜ்லிஸ் ஷுூராவில் சிறப்பாக புகழ்ந்து கூறினார்கள். அந்த அளவுக்கு அவர்கள் இந்த சொற்பொழிவை விரும்பினார்கள். இஸ்லாஹ் வ இர்ஷாத், காஸி போன்ற பொறுப்புகளில் பணியாற்றி உள்ளார்கள். மரணிக்கும் தருவாய் வரை பாகிஸ்தானின் மஜ்லிஸே ஷுூராவின் சிறப்பு உறுப்பினராகவும் கலீஃபத்துல் மஸீஹின் தரப்பிலிருந்து நியமிக்கப்படுகின்ற சிறப்பு உறுப்பினராகவும் இருந்தார்கள்.

1952 - 53 -ல் கேம்பிரிஜின் மிக பிரபலமான International Biographic Center என்ற உலகளாவிய அமைப்பு மவ்லவி சாஹிப் அவர்களுக்கு Man of the Year என்ற பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. இந்த பட்டம் மிகவும் சிறப்பான அறிவாளிகளுக்கு மட்டுமே வழங்கப்படும் ஒன்றாகும். இவர்களுடைய திறண் வெற்றி மற்றும் தலைமைத்துவம் முழு உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

1994 -ல் இந்தியாவின் தமிழ்நாடு என்ற மாநிலத்தின் கோயம்புத்தூர் என்ற ஊரில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கும், ஜமீஅத் அஹ்லே குர்ஆன் வல் ஹதீஸ் அமைப்பிற்கும் இடையே ஒரு விவாதம் நடந்தது. இந்த விவாதம் அங்குள்ள ஒரு ஹோட்டலின் மிகப்பெரிய அரங்கில் வைத்து நடைபெற்றது. 9 நாள் வரை இந்த விவாதம் நடைபெற்றது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியதற்கு இணங்க மவ்லவி சாஹிப் அங்கு சென்றார்கள். அல்லாஹ் அங்கும் மவ்லவி சாஹிபுக்கு வெற்றியை வழங்கினான். ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் பிரதிநிதி என்ற பணியை சிறப்பாக செய்தார்கள். அங்கு (கோயம்புத்தூர்) இருந்த போது மவ்லவி சாஹிபின் ஒரு மகளுக்கு திருமணம் நடந்தது. இதில் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறு இரண்டு மகள்களின் திருமணத்தின் போதும் மவ்லவி சாஹிப் சுற்றுப்பயணத்தில் இருந்தார்கள். திருமண நாள் அன்றே மவ்லவி சாஹிப் வீட்டிற்குச் சென்றார்கள். சொந்த வேலை இருக்கிறதே என்று ஒருபோதும் மவ்லவி சாஹிப் பொருட்படுத்தியதேயில்லை.

1982 -ல் அல்லாஹ்வின் வழியில் சிறை வாசம் சென்றவர் என்ற நற்பாக்கியமும் கிடைத்தது. ரப்வாவின் காவலில் சில நாட்கள் இருந்தார்கள். 1988 ஏப்ரலில் மீண்டும் குஜ்ரன்வாலா என்ற ஊரின் District Jail -ல் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள். பிறகு 1990 -ல் மவ்லவி சாஹிப் ஜாமீனை மறுத்து இரண்டு வருடம் தொடர்ந்து ஜெயிலில் கஷ்டப்பட்டு கழித்தார்கள். பிறகு ரூ. 5000/- அபாரதம் மவ்லவி சாஹிபுக்கும், அவர்களுடன் சென்ற பிற நண்பர்களுக்கும் விதித்து விடுதலை வழங்கினர். ஜெயிலிலும் திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் தப்லீகை தொடர்ந்து செய்து வந்தார்கள்.

மவ்லவி சாஹிப் தனது ஒரு சம்பவத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

ஒருமுறை ஜல்ஸாவின் போது வழக்கம்போல் இரவில் தூங்குவதற்காக அலுவலகத்திலேயே படுக்கையை விரித்து வைத்திருந்தேன். அப்போது சாகிப் ஸேர்வி சாஹிப் அங்கு வந்தார்கள். என்ன விஷயமாக வந்தீர்கள் என்று கேட்டதற்கு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் Private Secretary இடம் இன்னின்ன ஆதாரங்களை மவ்லவி சாஹிபிடமிருந்து பெற்று எனக்கு அனுப்பி வையுங்கள் என்று கேட்டதாக கூறினார். அப்போது அவர் இரவு நேரமாகி விட்டதே. இப்போது மவ்லவி சாஹிப் எங்கிருப்பார்களோ என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், மவ்லவி சாஹிப் அவர்களுடைய அலுவலகத்தில் இருப்பார்கள் என்று கூறினார்கள். எனவே நீங்கள் அலுவலகத்தில் இருக்கிறீர்களா இல்லையா? என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே நான் வந்தேன் என்று சாகிப் ஸேர்வி சாஹிப் கூறினார்கள். இரவு பகலமாக மவ்லவி சாஹிப் ஜமாஅத்திற்காக உழைத்தார்கள். காலத்தின் கலீஃபாவிடமிருந்து ஏதாவது பணி வந்தால் அது இரவு 2 மணிக்கு வந்தாலும் உடனடியாக அந்த வேலையை செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அந்த வேலையை முடிக்காமல் வேறு எந்த வேலையும் செய்யமாட்டார்கள்.

வஃபாத்திற்கு சில நாட்களுக்கு முன் மவ்லவி சாஹிப் எனக்கு டாக்டர் அப்துஸ் ஸலாம் சாஹிப் அவர்களின் குரல் கேட்டது. அவர்கள் எனக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள் என்று டாக்டர் முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிப் அவர்களிடம் கூறினார்கள். இது வஃபாத்தின் செய்தியாகும். ஏதாவது கஷ்டம் வந்தால் உடனடியாக கலீஃபாவிற்கு துஆ செய்யுமாறு கடிதம் எழுதுங்கள். பிறகு சதகா கொடுத்து விட்டு ஸலவாத் மற்றும் இஸ்திக்ஃபார் அதிகமாக ஓதுங்கள் என மவ்லவி சாஹிப் கூறுவார்கள். அரபி, பார்ஸி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூற்களை மிக அதிகமாக படித்து வந்தார்கள். மவ்லவி சாஹிப் சொந்தமாக நூலகம் ஒன்று வைத்திருந்தார்கள். இதில் ஏறக்குறைய 8000 நூற்கள் இருந்தன. வீட்டிலேயே இந்த நூல்களை வைத்திருந்தார்கள். கலீஃபா இருக்கும் வரை ரப்வாவை விட்டு வெளியே செல்வதற்கு அனுமதி வாங்க வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. பிறகு உள்ளூர் அமீரின் அனுமதி இல்லாமல் மவ்லவி சாஹிப் ஒருபோதும் ரப்வாவை விட்டு வெளியே சென்றதில்லை.

மிகவும் எளிய உடையும், மிகத் தூய்மையான உடையும் அணிவார்கள். தினமும் குளிப்பது, நறுமணம் பூசிக் கொள்வது இவர்களின் பழக்கமாக இருந்தது.

இவர்கள் ஜமாஅத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்ததால் பல கஷ்டமான சூழ்நிலை வந்தது. ஆனால் ஒருபோதும் யாரிடமும் கையேந்தியதில்லை. ஒருமுறை சில முரப்பிகள் மவ்லவி சாஹிபிடம் வந்து ஒரு தாளை நீட்டி இதில் கையெழுத்திடுங்கள் என்று கூறினார்கள். அதில் தஹ்ரீகே ஜதீதின் முபல்லிக்குகளுக்கு அதிக அலோவன்ஸ் கிடைக்கிறது. ஆனால் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் முபல்லிக்குகளுக்கு குறைவாக கிடைக்கிறது. எனவே இதை பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி எழுதப்பட்டிருந்தது. நான் இதில் கையெழுத்திட மாட்டேன். ஏனென்றால் நான் வாழ்க்கையை அர்ப்பணித்தவன் ஆவேன். ஜமாஅத் எனக்கு எதை தருகிறதோ அதை நான் நூறு முறை நன்றி கூறி ஏற்றுக் கொள்வேன். ஜமாஅத் நம்மிடமிருந்து எதையும் வாங்காமல் நமக்கு ஒரு தொகையை மாதாமாதம் வருகிறது. இது ஜமாஅத்தின் பெருமையாகும் என்று கூறினார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மவ்லவி சாஹிபை அழைத்து வரும்படி ஆள் அனுப்பினார்கள். எங்கு தேடியும் மவ்லவி சாஹிப் கிடைக்கவில்லை. நூலகம், அலுவலகம் என்று எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அஸர் தொழுகைக்கு மவ்லவி சாஹிப் வந்ததும் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நான் உங்களை எல்லா இடமும் தேடினேன். நீங்கள் எங்கே சென்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு மவ்லவி சாஹிப் நான் நூலகத்தில் இருந்தேன். நான் நூலகத்திற்கு செல்லுமுன் நூலகத்தில் வேலை செய்பவர் நூலகத்தை பூட்டி விட்டு வெளியே சென்று விட்டார். எனக்கு வேலை இருந்தது. எனவே நான் சுவரைத் தாண்டி உள்ளே சென்று வேலை பார்த்துக் கொண்டிருந்தேன் என்று கூறினார்கள். எல்லா வேலைகளையும்

தாமாகவே செய்வார்கள். புத்தகங்களுக்கு அட்டை போடுவது போன்ற வேலைகளை தாமே செய்வார்கள். மவ்லவி சாஹிப் தமது வீட்டிலேயே சொந்த நூலகம் அமைத்திருந்தார்கள் என்று நான் கூறினேன். இரவில் எப்போது கலீஃபத்துல் மஸீஹ் புறமிருந்து ஏதாவது வேலை வந்தாலும், ஏதாவது ஆதாரம் தேட வேண்டியது வந்தாலும் ஜமாஅத்தின் நூலகத்தை திறக்கும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. உடனடியாக அந்த வேலையை முடித்து விடலாம் என்று எண்ணிதான் சொந்தமாக வீட்டிலேயே நூலகம் ஒன்றை அமைத்து வைத்திருந்தார்கள்.

துவக்க காலங்களில் இவர்களிடம் சைக்கிள் கூட இருந்ததில்லை. எங்கு செல்ல வேண்டியது வந்தாலும் நடந்தே செல்வார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமா நடக்கும் T.I. (Taleemul Islam) College -ன் மைதானத்தில் அல்லது குதிரை ஓட்டும் மைதானத்தில் நடைபெறும். அஞ்சுமன் குடியிருப்பிலிருந்து இந்த இடம் மிகவும் தொலைவில் உள்ளது. மவ்லவி சாஹிப் நடந்தே செல்வார்கள். இது எனக்கும் ஞாபகம் இருக்கிறது. மிகவும் கண்ணியமான உடை, தலைப்பாகை, கைத்தடி, கோட்டு அணிந்து கொண்டு கம்பீரமாக நடப்பார்கள். அந்த சமயத்தில் மவ்லவி சாஹிப் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினராக (இளைஞராக) இருந்தார்கள். அந்த காலத்தில் இருந்த ஜமாஅத்தில் சூழ்நிலையில் சைக்கிள் கூட கிடையாது. முபல்லிக்குகள், வாழ்க்கை அர்ப்பணித்தவர்களுக்கு சலுகைகளும் மிகக் குறைவாக இருந்தது. மவ்லவி சாஹிப் அவர்களின் மகன் என்னிடம் உண்மையிலேயே சைக்கிள் வாங்க முடியாத நிலையில்தான் அன்றைய காலம் இருந்தது. ரப்வாவில் எங்கு செல்ல வேண்டுமானாலும் நடந்து தான் செல்வார்கள் என்று கூறினார்கள். 1978-79 -ல் ஜமாஅத் தரப்பிலிருந்து அவருக்கு சைக்கிள் கிடைத்தது.

கலீஃபாக்களின் மஜ்லிஸே இர்ஃபான் (கலீஃபா கலந்து கொள்கின்ற கேள்வி - பதில் நிகழ்ச்சி)யில் கலந்து கொள்கின்ற போது எப்போதும் தலை குனிந்தவாறே உட்கார்வார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மஜ்லிஸில் உட்காரும் போதும் தலை குனிந்தவாறு உட்காரும் பழக்கம் உள்ளவர்கள். அவ்வாறே நானும் தலைகுனிந்தவாறு உட்காருவேன் என்று கூறினார்கள்.

ஒருமுறை மவ்லவி சாஹிப் மிகவும் சந்தோஷமாக வீட்டிற்கு வந்தார்கள். காரணம் கேட்டபோது நான் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை சந்திக்க சென்றேன். அப்போது ஏதோ வேலையாக ஹுஸுர் உள்ளே சென்றார்கள். அப்போது அவர்களுடைய காலணி வெளியே கிடந்தது. நான் எனது கைக்குட்டையை வைத்து அதை துடைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் சந்தோஷமாக இருக்கிறேன் என்று கூறினார்கள். இந்த சம்பவத்தை மவ்லவி சாஹிப் அவர்களின் மகன் கூறினார்கள்.

மவ்லவி சாஹிபின் குழந்தைகள் எங்கள் தந்தை எப்போது வீட்டிற்கு வந்தார்கள். எப்போது வெளியே போனார்கள் என்று மாதக்கணக்கில் எங்களுக்கு தெரியாமலேயே இருந்தது. மக்கள் உலக வேலைக்காக இவ்வாறு செய்வது வழக்கம். ஆனால் வாரத்தின் கடைசி நாட்களில் குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்குவார்கள். மவ்லவி சாஹிப் வரும் போது நாங்கள் தூங்கிக் கொண்டிருப்போம். அதிகாலையில் அவர்கள் வெளியே செல்லும் போதும் நாங்கள் தூங்கிக் கொண்டிருப்போம்.

## வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கும், முபல்லிக்குகளுக்கும் ஓர் அறிவுரை

1965 -ல் மூன்றாவது கிலாஃபத்தின் வரலாற்று சிறப்புமிக்க காலகட்டத்தின் முதல் ஜுமுஆவின் போது மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மவ்லவி சாஹிபை அழைத்து இன்று ஜுமுஆ விடுமுறை நாள் என்றாலும் உனக்கு ஒரு தொந்தரவு (பணி) கொடுத்துள்ளேன். மிக்க மகிழ்ச்சி என்றேன். அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறினார்கள். நான் எனது வாழக்கையை அர்ப்பணித்து வக்ஃப் படிவத்தை பூர்த்தி செய்து ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் கொடுத்தேன். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவை நீ எனது உள்ளத்திலிருந்த

மறைவான ஆசையை நிறைவேற்றி விட்டாய். நான் சொல்லாமலேயே நீ தானாக முன் வந்து தஹ்ரீகே ஜதீதின் ஆன்மீக போர் வீரர்களுடன் இணைய வேண்டும் என்று விரும்பினேன். இன்று எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நான் இப்போது சொல்வதை நன்றாக நினைவில் வைத்துக் கொள். நீ உனது வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டாய். இனி மரணத்திற்கு முன் உனக்கு எந்த விடுமுறையும் கிடையாது என்று கூறினார்கள். அப்போது மவ்லவி சாஹிப் ஹுஸூர் நானும் இந்த உடன்படிக்கையை செய்கிறேன். இனி நான் வாழ்க்கையை அர்ப்பணித்தவன் என்ற முறையில் இரவு பகலாக மார்க்கத் தொண்டாற்றுவதில் மூழ்கி இருப்பேன் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் அருளால் இறுதி நேரம் வரை இந்த வாக்குறுதியை நிறைவேற்றினார்கள்.

மருத்துவமனையில் சேர்க்கப்படும் போது மிகவும் பலவீனமாக இருந்தார்கள். சற்று பலவீனம் மறைந்து ஆரோக்கியம் பெற்றபோதெல்லாம் கடைசி இரண்டு மூன்று நாட்களில் ஓரளவு பலவீனம் குறைந்திருந்தது. அப்போதும் அவர்கள் என்னை சீக்கிரம் மருத்துவமனையிலிருந்து அனுப்பி விடுங்கள். கலீஃபா என்னிடம் சில வேலையை ஒப்படைத்துள்ளார்கள். அதை நான் உடனடியாக முடிக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆக இறுதி மூச்சு இருக்கும் வரை அவர்ள் இந்த உடன்படிக்கையைப் பேணினார்கள்.

அல்லாஹ் இவர்களின் பதவிகளை உயர்த்துவானாக. இவர்கள் செய்த நன்மைகளை இவர்களுடைய சந்ததிகளும் தொடர்ந்து செய்யும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

இது தவிர இன்னும் இரண்டு ஜனாஸா இருக்கிறது. அதில் ஒன்று, மவ்லவி சாஹிபின் தம்பியும் வஃபாத் ஆகி விட்டார்கள். இவர் மவ்லவி சாஹிபை விட ஏழு வயது இளையவர் ஆவார். மவ்லவி சாஹிப் இறந்து ஒரு மணி நேரம் கழித்து இறந்தார்கள். அவர் மூஸி (வஸிய்யத் செய்தவர்) ஆவார். இவருக்கு குழந்தைகள் யாரும் இல்லை. இவர் பெஹஸ்தி மக்பராவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பொருள் தியாகத்தில் மிகவும் முன்னணியில் இருந்தார்கள். வஃபாத்திற்கு முன் இவர் மர்யம் Fund ற்காக ரூ. இரண்டு இலட்சம் கொடுப்பதாக வஸிய்யத் செய்தார்கள். பிறகு விதவைக்காக ரூபாய் இரண்டு இலட்சம் கொடுத்தார்கள். நன்மை மற்றும் தியாகம் செய்பவராக இருந்தார். இவருடைய பெயர் முஹம்மது அஸ்லம் சாஹிப்.

இரண்டாவது ஜனாஸா நஸீம் பேகம் சாஹிபா அவர்கள் ஆவார்கள். இவர் பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இவரும் ஆகஸ்டு 17 ஆம் தேதி இறந்தார்கள். நமது முபல்லிக் முஹம்மது ஆரிஃப் பஷீர் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார். முபல்லிக் சாஹிப் தன்ஸானிய்யாவில் பணிபுரிந்து வருகிறார். இவர் duty –ல் இருப்பதால் தனது தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. மவ்லவி சாஹிப் தனது தாயாரைப் பற்றி இவ்வாறு கூறுகிறார். நான் ஜாமியாவில் சேர்ந்த பிறகு மகனே! நீ படித்து வா. மார்க்கத்திற்கு தொண்டு செய் என்ற பஞ்சாபி மொழியில் அறிவுரை கூறினார்கள். இவரும் மூஸியா (வஸிய்யத் செய்தவர்) ஆவார்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 28.08.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**